1981 ஏப்ரல் 3]

8. அறிக்கை அளித்தல்

கல்வி அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு திரு. செ. அரங்நாயபம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 198-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12-ஆம் நாள் அ று. 1981-ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல் சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/19 1)-இன் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளிக்கையில் நான் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டேன்.

"அதற்குப் பிறகு யு.ஜி.ஸி. கிராண்ட் 5 இலட்சம் ரூபாய்க்குப் பட்டப் படிப்பிற்காக தந்திருந்தார்கள். அப்படி தரப் பெற்ற அந்தப் பணத்தை இந்தக் கல்லூரி நிர்வாகம் சரியான முறையில் எதற்காக தரப் பெற்றதோ அதற்குப் பயன்படுத்த வில்லை"

அதைக் கீழ்க்கண்டவாறு திருத்திக் கொள்ள வேண்டும்.—

"யு.ஜி.ஸி-இல் இருந்து கிராண்ட் 5 இலட்சம் ரூபாய் தருவதற்காக தகுதி பெற்ற நிலை இருந்தும் அந்த 5 இலட்சம் ரூபாயை பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து பெறுவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை."

6. கவன ஈர்ப்புகள்.

அ. திருவொற்றியூர்-பொன்னேரி பகுதி மீனவர்களிடையே தொடர்ந்து மோதல் ஏற்பட்டுவருவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவொற்றியூர், பொன்னேரி பகுதி மீனவர்களிடையே 19 1-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ஆம் நாள் முதல் தொடர்ந்து நடக்கும் மோதல் குறித்து திருவாளர்கள் ப.பொன்னுரங்கள், இரா. தாமரைக்கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, திருவொற்றியூர், பொன்னேரி பகுதி மீனவர்களிடையே 19 1-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ஆம் நாள் முதல் தொடர்ந்து நடக்கும் மோதல் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.